
# பேரண்டக் கனவு

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்



# பேரண்டக் கனவு

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்

ஆயிஷா பதிப்பகம்
மருதமுனை.

| | |
|---|---|
| பேரண்டக் கனவு | *Perandakkanavu* |
| கவிதைகள் | *Poems* |
| ஆசிரியர் | Author |
| எம்.எம். நௌபல் (SLPS, SLAS) | **M.M. Noufal** (SLPS, SLAS) |
| பதிப்புரிமை | Copyright |
| எம்.எம். மிஹ்லார் - ஆசிரியர் | **M.M. Mihlar - Teacher** |
| வெளியீடு | Published by |
| ஆயிஷா வெளியீட்டகம், | **Aysha Publication** |
| 520, மசூர்மௌலானா வீதி, | 520, Mashoor Moulana Road, |
| மருதமுனை-03. | Maruthamunai - 03. |
| அட்டைப்படம் | Cover Design |
| எஸ். நளீம் (ஓட்டமாவடி) | **S. Naleem** (Oddamavady) |
| முதற்பதிவு | First Published |
| **2016.03.15** | **2016.03.15** |
| அச்சுப்பதிவு | Printed by |
| அப்னா பிரின்ட், மருதமுனை. | **Abna Print, Maruthamunai.** |
| இணையத்தளம் : | Web site : |
| **www.noufallanka.org** | **www.noufallanka.org** |
| தொலைபேசி : **077-6009247** | Phone : **077-6009247** |
| மின்னஞ்சல் : | E mail : |
| **nawfalds@gmail.com** | **nawfalds@gmail.com** |
| விலை : **250/=** | Price : **250/=** |
| ISBN : **978-955-42405-2-0** | ISBN : **978-955-42405-2-0** |

**விற்பனை, விநியோகப் பிரிவு**
**வழியார் வாசகர் வட்டம், மட்டக்களப்பு**
**இல 83/1, ரெத்தினம் வீதி,**
**வாழைச்சேனை**
**தொ.இல : 0772532296**

எனது மூத்தம்மா

முத்தும்மா என்று அழைக்கப்பட்ட

[புலவர் மணியின் மூன்றாவது தங்கை]

உம்மு சல்மா அவர்களுக்கு

## பேரண்டக் கனவின் உள்ளே...


| கனவுகள் | | பக்க எண் |
|---|---|---|
| 01. கனவு ஒன்று | - வண்ணத்துப் பூச்சியின் முணுமுணுப்பு | 01 |
| 02. *துளி ஒன்று, துளி இரண்டு* | | 02 |
| 03. கனவு இரண்டு | - பேரண்டக் கனவு | 03 |
| 04. *துளி மூன்று, துளி நான்கு* | | 04 |
| 05. கனவு மூன்று | - சாளரம் | 05 |
| 06. *துளி ஐந்து, துளி ஆறு* | | 06 |
| 07. கனவு நான்கு | - சகடவோட்டம் | 07 |
| 08. *துளி ஏழு, துளி எட்டு* | | 09 |
| 09. கனவு ஐந்து | - வித்து | 10 |
| 10. *துளி ஒன்பது, துளி பத்து* | | 11 |
| 11. கனவு ஆறு | - கனவுத்தெரு | 12 |
| 12. *துளி பதினொன்று, துளி பன்னிரெண்டு* | | 13 |
| 13. கனவு ஏழு | - பனிப்பூக்கள் | 14 |
| 14. *துளி பதின்மூன்று, துளி பதினான்கு* | | 15 |
| 15. கனவு எட்டு | - கவிதை மீன்கள் | 16 |
| 16. *துளி பதினைந்து, துளி பதினாறு* | | 17 |
| 17. கனவு ஒன்பது | - அவள் | 18 |
| 18. *துளி பதினேழு, துளி பதினெட்டு* | | 19 |
| 19. கனவு பத்து | - சிந்திக்கத் தெரிந்த மழை | 20 |
| 20. *துளி பத்தொன்பது, துளி இருபது* | | 21 |
| 21. கனவு பதினொன்று | - கர்ப்பமடைந்த வித்து | 22 |
| 22. *துளி இருபத்தொன்று, துளி இருபத்திரெண்டு* | | 23 |
| 23. கனவு பன்னிரண்டு | - கனவு வெளியில் கவிதை | 24 |
| 24. *துளி இருபத்தி மூன்று, துளி இருபத்தி நான்கு* | | 25 |
| 25. கனவு பதின்மூன்று | - மண்ணை முத்தமிடும் மழைத்துளிகள் | 26 |
| 26. கனவு பதின்நான்கு | - இரவின் மலர்ச்சி | 28 |
| 27. *துளி இருபத்தைந்து, துளி இருபத்தாறு* | | 29 |
| 28. கனவு பதினைந்து | - விவசாயியின் உழைப்பு | 30 |
| 29. *துளி இருபத்தியேழு, துளி இருபத்தியெட்டு* | | 31 |
| 30. கனவு பதினாறு | - நிலவுக்குளியல் | 32 |
| 31. *துளி இருபத்தொன்பது, துளி முப்பது* | | 33 |
| 32. கனவு பதினேழு | - இரவு எரிகிறது | 34 |
| 33. *துளி முப்பத்தொன்று, துளி முப்பத்திரெண்டு* | | 35 |
| 34. கனவு பதினெட்டு | - வற்றிய குளத்தின் மகிழ்ச்சி | 36 |

35. *துளி முப்பத்திமூன்று, துளி முப்பத்தி நான்கு* 37
36. கனவு பத்தொன்பது - **அவளுக்காக அந்த உயிர்** 38
37. *துளி முப்பத்தைந்து, துளி முப்பத்தாறு* 39
38. கனவு இருபது - **கவிதை மரம்** 40
39. *துளி முப்பத்தியேழு, துளி முப்பத்தியெட்டு* 41
40. கனவு இருபத்தொன்று - **கனவின் பிரதிமை** 42
41. *துளி முப்பத்தொன்பது, துளி நாற்பது* 43
42. கனவு இருபத்திரெண்டு - **மழைக்காலம்** 44
43. *துளி நாற்பத்தொன்று, துளி நாற்பத்திரெண்டு* 45
44. கனவு இருபத்திமூன்று - **சிந்தனை விதைகள்** 46
45. *துளி நாற்பத்தி மூன்று, துளி நாற்பத்தி நான்கு* 47
46. கனவு இருபத்திநான்கு - **நடை அழகி** 48
47. *துளி நாற்பத்தைந்து, துளி நாற்பத்தாறு* 49
48. கனவு இருபத்தைந்து - **குணங்கள்** 50
49. *துளி நாற்பத்தியேழு, துளி நாற்பத்தெட்டு* 51
50. கனவு இருபத்தாறு - **கறுப்பழகி** 52
51. *துளி நாற்பத்தொன்பது, துளி ஐம்பது* 53
52. கனவு இருபத்தியேழு - **வாழ்விடம்** 54
53. *துளி ஐம்பத்தொன்று, துளி ஐம்பத்திரெண்டு* 56
54. *துளி ஐம்பத்தி மூன்று, துளி ஐம்பத்திநான்கு* 57
55. கனவு இருபத்தியெட்டு - **அவன் அழகானவன்** 58
56. *துளி ஐம்பத்தைந்து, துளி ஐம்பத்தியாறு* 59
57. கனவு இருபத்தொன்பது - உள்ளுணர்வு 60
58. *துளி ஐம்பத்தியேழு, துளி ஐம்பத்தியெட்டு* 61
59. கனவு முப்பது - கவலையென்று அவள் 62
60. *துளி ஐம்பத்தொன்பது, துளி அறுபது* 63
61. கனவு முப்பத்தொன்று - இலைகள் மரங்கள் 64
62. *துளி அறுபத்தொன்று, துளி அறுபத்திரெண்டு* 65
63. கனவு முப்பத்திரெண்டு - மழை வரும் நாள் 66
64. *துளி அறுபத்தி மூன்று, துளி அறுபத்தி நான்கு* 68
65. கனவு முப்பத்திமூன்று - நடைப்பயணம் 69
66. *துளி அறுபத்தைந்து, துளி அறுபத்தியாறு* 70
67. கனவு முப்பத்தி நான்கு - பிரமை 71
68. *துளி அறுபத்தியேழு, துளி அறுபத்தெட்டு* 72
69. கனவு முப்பத்தி ஐந்து - மாயப் புத்தகம் 73
70. *துளி அறுபத்தொன்பது, துளி எழுபது* 75
71. கடைசிப்பக்கச் செய்தி 76
72. நூலாசிரியரின் முன்னைய ஆக்கங்கள் 76

## என் மன வெளியிலிருந்து...

ஒரு சிந்தனையை செய்தியை அல்லது தகவலை ஒரு படைப்பாளி தனது படைப்புக்களில் கூர்மையடையச் செய்து கனவும் ஆற்றல் மூலம் உச்சத்திற்கு கொண்டு செல்வதுதான் கவிதை எனலாம். இச்செயற்பாடு சில வேளைகளில் மொழியின் உச்சத்தை தொடுகிறது. இங்கு நிகழ்கால பிரங்ஞையும் கலந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. கவிதைக்கு சிந்தனையின் கூர்மையும் சுருக்கமும் முக்கியம். இவ்வாறான படைப்புக்கள் தான் வாசகனுக்கு விருப்பத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதீத கற்பனை கலந்த படைப்புக்கள் விரிந்த கவிதை வெளியில் முக்கியமானவை. பிரபஞ்ச உண்மையை இலக்கிய வெளிகளுக்குள் கொண்டு வரும் போது அவை சிறந்த கவிதைகளாக அமைந்து விடும். அவை தம்மை சூழவுள்ள உலகினை விரித்துக்காட்டுகின்ற கவிதைகளாக அமைந்து விடுகின்றன்றது.மேலும் மனதின் மடிப்புக்களில் தங்கியிருக்கும் எண்ணங்களை படைப்பின் அழகியலுக்குள் வார்த்தைகளில் கொண்டு வருவது ஒரு கஷ்டமான விடயம்தான். தற்காலத்தில் பெரும்பாலான கவிதைகளில் தத்துவம் உள்ளே இடம்பிடித்திருக்கிறது. அது வாழ்க்கையின் பல்வேறு பட்ட விடயங்களை உள்ளடக்கியிருகக்கிறது. அத்துடன் கவிதைகள் காலாதி காலமாக உணர்வுகளின் ஓவியமாகவும் பார்க்கப்படுகின்றன.

என் மன சேமிப்புக்கிடங்கிலருந்து சில வசனக் கவிதைகளையும் நாலைந்து வரிகளுடன்கூடிய பல சிறிய கவிதைத் துளிகளையும் இந்தத் தொகுதியில் தந்திருக்கிறேன். என்னுடைய கடந்த இரண்டு தொகுப்புக்களிலும் உள்ள கவிதை முயற்சியிலிருந்து முற்றிலும் விலகி வேறு தடங்களில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறேன். எனது பாதை அல்லது பயணம் சரியானதா?

வாசகர் மனம் தீர்மானிக்கட்டும்!

அன்புடன்
உங்கள்
**எம். எம். நௌபல்**

இத்தொகுதியிலுள்ள நெடிய கவிதைகளை விட குட்டையானவை பிரகாசிக்கின்றன. ஒரு பூந்தோட்டத்தில் அழகான குள்ளர்கள் உலாவருவதைப் போல இருக்கின்றன. குட்டையர்கள் அதிகம் நிறைந்திருக்கும் இந்தத் தொகுதி நௌபலின் ஏனைய தொகுதிகளில் நின்றும் மாறுபடுகின்றது. குட்டையர்கள் காத்திரமானவர்கள் என்பதை இங்கும் நாம் உணர முடிகின்றது.

நௌபலின் இந்தத் தொகுதியைப் பார்க்கும்போது, இவரின் சிந்தனை மாறுபட்டிருக் கின்றது. கவிதையைப் பொத்திவைக்கும் கைவண்ணம் மேலோங்கியிருக் கின்றது. இடம்பார்த்து அமர்த்தும் திறனும் பரவாயில்லை. பாடப்பாடத்தான் கவிதை நாக்கில் விளங்கும் என்பது புலனாகிறது.

கவிதை ஒரு தியானம். அதற்காக கவிஞன் கொஞ்ச நேரமாவது தன்னை ஒதுக்க வேண்டும். தியானத்துக்குள் பொறுக்குவதுதான் கவிதை மணி. நாம் எந்த அளவுக்கு அதற்குள் தம்மை ஒப்புவிக்கின்றோமோ அந்த அளவுக்கு மணி கிடைக்கும்.

குளியலறையில் ஊத்தை தேய்த்துக் கொண்டு அல்லது சந்தைக்குள் காய்கறிகள் வாங்கியபடி நல்ல கவிதை பாட முடியாது. கவிதைக்கு ஒரு வாழ்க்கை தேவைப்படுகின்றது. அந்த வாழ்க்கைக்கு கவிஞன் வர வேண்டும்.

இவ்வளவு வேகத்தில் மூன்று தொகுதிகளா இலக்கு என்று கேட்பது தேவையற்றது. படம் பார்க்கும் போது திரையரங்கில் கூச்சல் இடுவதற்கு ஒப்பானது. ஒரு நாளைக்கு நாலு கவிதைகளும் வெளியிடலாம். கவிதை தாம் கூப்பிடும் பிள்ளையாக இருந்தால் கவிதையை கூப்பிடும் பிள்ளையாக்குவது எப்படி என்பதுதான் புதிர். அது மந்திரம். அதை யாருக்கும் சொல்லிவிட இயலாது. அவரவர் தாமாகவே படித்துக்கொள்ள வேண்டும்.

ஒரு பெண்ணைத் தன் வசமாக்க ஒருவன் அவள் பின்னால் அலைவான். இன்னொருவன் பல்லைக்காட்டுவான். வேறொருவன் மிட்டாய் வாங்கிக் கொடுப்பான். இப்படி அவனவனுக்கு ஏற்ற விதத்தில் இது நடக்கும். கவிதையையும் இப்படித்தான் கவிஞர்கள் தங்களுக்குத் தெரிந்த விதங்களில் வசமாக்கிக் கொள்கிறார்கள். அதனை தம் வசமாக்கி அதனால் தங்களை வளைத்து விடுகிறார்கள்.

கவிதையும் தான் - ஒரு பெண் ஒருவனை, சீ.... இவனா, இவன் எதற்கு, எங்கள் வாசப்படி பாதணிக்கு ஒப்பானவன் என்பதைப் போலவும்,

இவன் உதவாக்கரை இவனோடு உறவு வைத்தால் தமது மானமே போய் விடும் என்பதாகவும்,

இவன் தமக்கு லாயக்கு அற்றவன், இவனோடு நேசமானால் மோசமாய் போவோம் என்றவாறும்,

பலரைக் கழித்து, சிலரையே தெரிவு செய்கிறது.

கவிஞர்களைத் தெரிவு செய்வதில் கவிதை மிகமிக கெட்டித்தனமுள்ளது.

இங்கு நௌபல் அடிக்கும் சீட்டியைக் கேட்டு கவிதை முகம் சுழிக்கவில்லை. மனதில் ஓர் ஈர்ப்பு வர, இவரை ஓரக்கண்ணால் பார்க்கிறது. நௌபல் இந்தச் சூழலை இன்னும் வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கான மன நிலையை இவரின் கவிதை கொண்டிருக்கிறது. குழம்பி விடக்கூடாது.

கவிதையும் கவிஞனும் குழம்புவது இந்தக் காலத்தில் பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. கவிதை கவிஞனோடு குழம்பினால், எந்த இணக்க சபைகளாலும் சேர்த்து வைக்க முடியாது.

**சோலைக்கிளி**
2016.02.18

// அசையும் இருட்டில் இரவு எரிகிறது
கனவில் நீந்தி
கவிதை தன் சுடரும் கீற்றுக்களை
வாசலில் தொங்க விடுகிறது
சிறுகை நீட்டி பனித்துளிகள்
குளிர்காய்கின்றன
மழைப்பழங்கள் வாசலில்
குதூகலித்துக் கொண்டாடுகிறது //
(இரவு எரிகிறது)

வாழ்க்கை மலர்ச்சியும் ஒளியும் கொண்டதாக மாற்றி அமைக்கக்கூடிய கலைத் தன்மைகள் மிகுந்த மனம். அந்த வாழ்வின் சவால்களுக்கூடாக பயணிப்பதற்கும் கடந்து செல்வதற்கும் வழங்கப்பட்ட மாய வலிமையாக அமைந்து விடுகிறது. நௌபலின் மனமானது அவருக்கேயான கவிதைகளால் நிறைந்திருக்கிறது.

கனவுகளையும் யதார்த்தங்களையும் தனது மொழியின் மென்மையான அசைவுகளால் தீட்ட முற்பட்டிருக்கிறார். தனது ஆற்றலை வேலைப்பழுவிலும் நெருக்கடிகளிலும் தொலைந்துபோக விடாமல் தினமும் வாழ்வை அழகாக்குவதற்காக கவிதைகளினால் கனவு காண்கிறார். கனவை வாழ்வது தானே கவிதை....

நவீன சிந்தனைகளின் வடிவமாக நவீன உலகின் ஆன்மீக வடிவமாக கவிதைகள் எழுதப்பட்டு வரும் காலமிது. நம்முடைய பண்பாடுகளின் நாகரீகத்தின் மொழிச் செழுமையை பிரதிபலிப்பதாக இந்நூலில் கவிதைகளை கையாண்டுள்ளார். காலத்தின் அடையாளம் நினைவுகளின் மீட்சி என அவரது கவிதைகள் வடிவம் கொள்கின்றன. சமுதாய அக்கறையையும் அழகியலையும் சார்ந்திருக்கிறது.

தற்போதுள்ள அறிவியல் யுகத்தின் மொழியியல் வளர்ச்சி வேகத்தில் நவீன உள்ளடக்கங்களோடு கவிதைகள் எழுதப்படுகின்றன. அவரவர் கருத்தும் படைப்புச் சுதந்திரமும் சிந்தனையும் செயற்பட முடிந்தளவு அந்தப் படைப்பினது ஆற்றலும் மேம்படுகின்றது. அதுவே சாசுவதத்தைக் கொண்ட கலைப் படைப்பாகின்றது.

அந்த வகையில் நௌபலுடைய கவிதைகள் பற்றிய தீர்மானங்களை காலத்தின் முன் விட்டுவிடலாம். மேலும் மழை எனும் படிமத்தை அவர் கவிதைகளில் அதிகமாக கையாண்டுள்ளார். அவ்வாறே அவருடைய மழை ஓயாது பெய்யட்டும். அவரது கவிதைக் கனவுகளை நிறைக்கட்டும்.

// திறந்திருக்கின்றது
சாளரம் வழமை போன்று
மரங்களிலிருந்து கழன்ற
ஒற்றை இலை எட்டிப் பார்க்கிறது
சாளரத்தினூடே என்னை முத்தமிட
சாமரங்களை வரவேற்கும் இலைகள்
முகங்களைப் படம்பிடிக்கின்றது
சில முகங்களை சிறைப்படுத்துகின்றது
சூரியனில் உதிரும் வெளிச்சங்கள் //
(சாளரம்)

என்னுடைய வாழ்த்துக்கள்.
**அனார்**
15-02-2016.

# நன்றிகள்

திறந்து கிடக்கின்ற மனத்தின் வெளிகளில் பசுமையாக தவழ்ந்து திரிகின்ற எண்ணங்களை தட்டச்சு செய்ய உதவிய ஐ. எம். முஸம்மில் (ஓட்டமாவடி) மற்றும் இக்கவிதைகளை பார்வையிட்டு அழகு படுத்திய மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபா அவர்களுக்கும், மேலும் சத்தார் எம். பிர்தௌஸ், கவிஞர் அபுல்ஹசன் மற்றும் எஸ். ராஜ்குமார் (மட்டக்களப்பு) அவர்களுக்கும் நன்றிகள். சிறந்த ஒரு அட்டைப் படத்தையும் அதில் நான்கைந்து வரிகளில் என்னை பின் அட்டைப் படத்தில் என்னைப்பதித்த எஸ். நளீம் (ஓட்டமாவடி) அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். மேலும் டைப்செற்றிங் செய்து உதவிய "பிறின்ட் இமேஜ்" உரிமையாளர் ஏ.எச்.எம். பாயிஸ் அவர்களுக்கும், இப்புத்தகத்தை அழகிய அச்சு வடிவில் கொண்டு வந்த அப்னா ஓப்செற் அச்சக உரிமையாளர் யூ.எல்.எம். நக்கீப் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் அழகான முன்னுரை ஒன்றைத் தந்த அனார் அவர்களுக்கும் புதுமையான முன்னுரை எழுதி இந்நூலுக்கு அழகு சேர்த்த சோலைக்கிளி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**எம்.எம். நௌபல்**

*பீடிகை*

எங்களில் பலர்
இறந்தது பற்றி உணர்ந்து கொண்டால்
மாத்திரமே
மீளிணக்கம் பற்றி பேசமு முடியும்

## வண்ணத்துப் பூச்சியின் முணுமுணுப்பு

உன்னுடைய கனவுகளில் நான் அடிக்கடி
நினைக்கப்படுகின்றேன் என்று முணுமுணுத்து
சிரித்துக்கொண்டு மெதுவாக நடக்க முயல்கிறேன்
உன்னுடைய அரூபம் என் முன்னே
முன்னோக்கி நகர்கிறது எனக்கு வழிகாட்டியாய்
சாலையில் உன் வாசனை
என் மூக்கின் நாசியில் நுழைகிறது
கூடவே அந்த மல்லிகையின் மணமும்
ஏக்கத்தில் மிதக்கிறது என் மனம்
உன் உருவத்தை வரைந்த படி இறகு ஒன்று
என் முன்னால் விழுகிறது
வண்ணத்துப் பூச்சி ஒன்று உன் அழகை முணுமுணுத்தபடி
மிதந்து செல்கிறது காற்றில்
அவள் பாடிய பாடலொன்று என் முன்னே
சுழன்றபடி இரைந்து செல்கிறது
அவள் உடல் மணம்
காற்றில் பரவி வருகிறது என் முன்னே

2015-04-24

## துளி ஒன்று

என் கவிதை மரத்திலிருந்து
ஒரு பூவையேனும் கொய்து விடாதே
அது இறந்து விட நேரிடும்

## துளி இரண்டு

தன்னை உதிர்த்து
கவிதைகளாக
விட்டுச் செல்கிறாள்
ஓர் ஒற்றைக் கவிதாயினி

## பேரண்டக் கனவு

இறந்து போன காலங்கள் நினைவுக்கு வருகிறது
பக்கவாட்டில் படுத்துக் கிடக்கும் பேரண்டம்
சுருங்கி கைகளுக்குள் அகப்படுகிறது
பூமி நடுங்கி நெருப்பலைகளை
பறக்க விடுகிறது வானில்
மரங்கள் படிப்படியாக இடம்பெயர்கின்றன
கால் முளைத்து
நிலம் கிழிந்து நீர் நிலைகள் பெருக்கெடுக்கிறது அது
ஆவியாகி கரைந்து
காற்று அலைகளாக உருவெடுத்து
பூமியின் மீது பேய் வேசம் போடுகிறது
மலைகள் மனிதர்கள் இருக்கும் இடம் தேடி நகர்கின்றன
வெயில் துண்டு துண்டாக ஒழுகி பூமியில் பயணிக்கிறது
பசுந்தரைகள் நெருப்பலைகளால் பழுப்பு நிறமாகி கரைந்து போகிறது
இத்தனையும் நடக்கும் என்று நினைப்பதால்
பூமியின் கடைசி மழையாகி நீ
முத்தம் ஒன்று கொடு எனக்கு

03.11.2014

## துளி மூன்று

நீ என்னைக் கடந்து போகும் போது
என் உயிர் துடிக்கிறது
உன் காற்று என்னைத் தொடுவதால்

## துளி நான்கு

நான் சிதைந்து போய் விட்டேன்
அவளின்
ஒற்றைப் பார்வை
என்னை வாசித்ததால்

கனவு மூன்று

## சாளரம்

திறந்திருக்கின்றது
சாளரம் வழமை போன்று
மரத்திலிருந்து கழன்ற
ஒற்றை இலை எட்டிப்பார்க்கிறது
சாளரத்தினூடே என்னை முத்தமிட
சாமரங்களை வரவேற்கும் இது
முகங்களைப் படம் பிடிக்கின்றது
சில முகங்களை சிறைப்படுத்துகின்றது
சூரியனில் உதிரும் வெளிச்சங்கள்
உள்ளே வந்து குவிகின்றன
வெளிச்சப்பந்துகளாக
அவளின் பார்வை மழையை
வடிகட்டும் சாதனமாகிறது பல நேரங்களில்
வார்த்தைப் பறவைகளை உள்ளே
வர அனுமதிக்கின்றது
பாதசாரிகளின் அழகினை கைது செய்கிறது
மழையின் துளிகளை செவிகளிலும்
உரோமங்கிலும் படிய அனுமதிக்கிறது
பெரு வெளியைப் பார்ப்பதற்கான
ஒரு சாதனம்
நிதர்சனமாக

04.05.2015

## துளி ஐந்து

என்னைத் தடவிச் செல்கிறது
பருவகாலத் தாவணி ஒன்று
ஆயிரம் கதைகள் சொல்லி
நானும் இருக்கிறேன்
அந்தக் கதைகளில்
தாவணியைத் தொட்டவனாய்

## துளி ஆறு

வாடிக் கிடக்கிறது என் கடல்
கால்களுக்கிடையில்
இன்னுமொரு பொழுதிற்காய்.

கனவு நான்கு

## சகடவோட்டம்

காலக் கண்ணாடி சுழல்வதால் சொட்டுச் சொட்டாக
கரைந்து போகிறது இரவு வெறுமையாக
விடியலுக்கு முலாம் பூசி அதிகாலை விழித்தெழுகின்றது
வழமை போன்று
காகங்கள் கரைந்து தெருவோரங்களில் படிகின்றன
இரைச்சலுடன்
சூரிய வெளிச்சத்தை சிறைப்படுத்தி நிறங்களை
உதிர்க்கின்றன கண்கள்
தீர்ந்து போகும் வெள்ளைப் பொழுதுகளை
பதிவு செய்கிறான் விவசாயி பருவகாலங்களில்
கரைந்து போகும் நாட்களை எண்ணுகிறார்கள்
காதலனும் காதலியும்
தானாய் விழும் மழைத்துளிகளை அளந்து குறிக்கிறான்
அணைக்கட்டுக்குரியவன்
நாட்கள் கடந்து போவதை அக மகிழ்ந்து கொள்கிறான்
கடன் கொடுத்தவன்

மாலைக்கருக்கலை வரவேற்கின்றன பின்னேரக் குருவிகள்
மகிழ்ச்சியாக
சூரியன் கரைவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது இரவு
சந்திரனின் குளிப்பில் தெருவெல்லாம்
நனைந்து போகிறது மெல்ல மெல்ல
வானவில்லின் நிறங்கள்
உதிர்ந்து போகின்றன சொட்டுச் சொட்டாக
பருவகாலக் குருவிகள் தன் நிறங்களை
கொட்டிச் செல்கின்றன வானவெளியில்
மரங்கள் சிலிர்த்து இலைகளை
உதிர்த்து விடுகின்றன மகிழ்ச்சியில்
ஒற்றை வண்ணத்துப்பூச்சி வானவில்லை
பரப்பிச் செல்கிறது ஆகாயத்தில்
பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன் நான்

## துளி ஏழு

ஒரு தடைவ பிரியத்தின் வாசலுக்கு
என்னை அழைத்துச் சென்றதை
என் ஞாபக அறையில் இருந்து
கண்டு கொண்டேன்

## துளி எட்டு

மௌனம் இனிமையானது
உனக்குள் இருக்கும் மௌனத்தால்
உயிர் போகிறது
அதே மௌனத்தால் உயிர்
பிளைக்கிறது சில நேரங்களில்

## வித்து

அம்மணமான விதை
வெயிலில் ஈரமாக்கப்படுகிறது
சுயமாய் மரத்திலிருந்து
பறவைகளின் உதவியுடன்
மனிதனின் முயற்சியால்
ஓர் இடம் சேர்கிறது
காற்று எடுத்துச் சென்று
விரும்பிய இடத்தில் புதைக்கிறது
மணணில் புதையுண்டு மேலாடையை நீக்கி
புழுதி பனி நிலத்தடி நீர் என்று உறுஞ்சி
ஓரிரு நாட்கள் அறுபட்டு அதனை அருந்தி
பூமியைத் தின்று உயிர் பெறுகின்றது
நிமிரும் தாவரம் மரம்
முதலில் வேர் ஊன்றி பரப்பி பூமி பிளந்து
இருப்பை தக்க வைத்து மேற் பரப்பில்
பரம்பியிருக்கிறது
முகமூடி களைந்த மனிதர்கள் போன்று
வேற்றுமை கிடையாது இதனிடத்தில்
நல்ல விதை நல்ல மரம்
விதை எனும் நல்ல விந்தணுவில்
நல்ல மனிதர்கள்.

### துளி ஒன்பது

உணர்கிறேன் ஒவ்வொரு நாளும்
உன் நினைவுகள்
என் மீது படருவதை

### துளி பத்து

சொந்தமில்லாத வெளிச்சத்தைக் கொண்ட
சந்திரனைப் பார்த்து ஆஹா என்கிறோம்
வெளிச்சத்திற்கு சொந்தக்காரனைப் பற்றி
எதுவுமே பேசாமல்

## கனவுத் தெரு

கனவுத் தெருவில் மரங்கள்
முளைத்து
கவிதைகள் பூத்துக் குலுங்கி
வண்டுகள் வந்து அக்கவிதைகளில்
தேன் குடித்து அப்பூக்களில் சவாரி செய்யும்
கவிதைகள் உதிர்ந்து கொண்டேயிருக்கும்
அந்த மரங்களில் மௌன சருகுகளாய்
சில கவிதைகள் குதித்து ஓடிக்கொண்டிருக்கும்
மரங்களுக்கிடையில்
கவிதைத்தேனை உறிஞ்சிக் குடிக்கும்
இரவுப் பறவைகள்
பின்னர்
கவிதைகளை எழுதி பறந்து செல்லும்
கவிதை மரங்களிலிருந்து தேன் சொட்டுக்கள்
தரையைத் தொட்டவண்ணமிருக்கும்
அந்த திறந்த தெருவில்
குறைந்தது இரண்டு சிட்டுக் குருவிகள்
ஒற்றை வண்ணத்துப்பூச்சி
பறந்து கொண்டிருக்கும் எப்போதும்
கனவு கண்டு கனவுத் தெரு விரிந்து கொண்டிருக்கும் நெடிதாக
இறுதியில் பலபேர் சேர்ந்து
ஒரு கனவை காண்பர் அந்த இரவில்
தெருவில் கனவு...!

22.01.2015

## துளி பதினொன்று

காலங்கள் சொட்டுச் சொட்டாக
வற்றிக் கொண்டிருக்கின்றது
நாட்களாக
மணிகளாக
நிமிடங்களாக

## துளி பன்னிரெண்டு

அவளைப் பார்த்த தினத்திலிருந்து
அவளிடமே மாட்டிக் கொள்கிறேன்
ஒவ்வொரு நாளும்

## பனிப் பூக்கள்

ஒற்றை மழைத்துளி என்னுள்
விழுந்து முளைக்கிறது
அதற்கு முன்னர்
காலத்தால் வேசம்போடும் கரு முகில்கள்
நீர்த்துளிகளை நிரப்புகின்றன வான வெளியில்
பனிப் பூக்கள் நீர் தாரகைகளாக மாறி
மின்னி மின்னி பூச்சிகளாக சிறகடிக்கின்றன
நிலவை மறைக்கும் அசையும் முகில் மலைகள்
வெண் பனிப் பூக்களை பிரசவிக்கின்றன
மூச்சுக் காற்றில் நனையும் நீர்த்துளிகள்
மீண்டும் ஆவியாகிறது முகில்களின்
தாகம் தணிப்பதற்கு
இடுக்குகளில் பனித்துளிகள் பரவி
மழையின் நூலிடைகளிலும் தாவுகின்றது
வெள்ளிப் பளிங்குகள் மண்மீது சொரிகின்றன
காற்றில் தொலையும் பனி வயல்கள்
கரைந்து என்னில் விழுகிறது
நீர்த்துளிகளாக
பனிப்பூவின் வெட்கத்தால்
நனைந்து போகிறேன் நான்.

13.08.2015

## துளி பதின்மூன்று

புகைப்படக் கருவி
இரு கண்கள்
சிறைப்பிடிக்கிறது
உருவங்களை மட்டுமல்ல
அது பற்றிய ஞானத்தையும்

## துளி பதினான்கு

"வான வெளிகளில்
மிதந்து வரும் காற்றாடி
எதிர்த்திசையில் நீந்துகின்றன
நூலின் துணை கொண்டு"

## கவிதை மீன்கள்

அழகு தமிழ் கவிதைகளின்
மொழிக் கூர்மையில் தன்னைக் கழுவிக்கொண்டு
புத்தகக் குளத்திற்குள் நீந்திச் செல்கின்றன
குளத்தினுள்ளும் வெளியேயும்
நீந்திக் குதூகலிக்கின்றன கவிதை மீன்கள்
அரை மாத்திரை முழு மாத்திரை என்பன
மீன்களை அலங்கரிக்கின்றன
குளத்துப் பறவைகள் மீன்களை கவ்வி வாசித்து
மீண்டும் குளத்தினுள் தவற விடுகின்றன
கவிதை மீன்களைப் பார்த்து வாசிகின்றது ஆகாயம்
மழைத்துளிகள் குளத்தை நிரப்பி கவிதைகளுக்கு
ஆர்வம் கொடுகின்றன
குளத்தில முகம் பார்க்க வரும் கால் நடைகளும்
மீன்களைப் பார்த்து இரசிக்கின்றன
காலம் மாறுவது மீன்களுக்குப் புரிகிறது இப்போது
இதனால் மழை வற்றி குளமும் வற்றிப் போகிறது
படிப்படியாக கவிதை மீன்களை எடுத்து
வாசிக்கத் தொடங்குகின்றான் விவசாயி
குளம் வற்றுவதற்குள்
வாசிப்பு சமனாகிவிடுகிறது.

06.12.2015

## துளி பதினைந்து

கண்களுக்கிடையில் ஊற்றெடுத்து
மனதின் அடுக்குகளில் சேமித்து
இதயத்தால் பதிவு செய்து
வார்த்தைகளால் வழிந்தோடுகிறது
காதல்

## துளி பதினாறு

சிரித்து மகிழ்ந்து கழிகிறது
நேற்றைய நாள்
அனாதையாகக் கிடக்கிறது
என் மன வெயில்
இன்றைய நாளில்

## அவள்

உயிர் மூச்சில்
பனித்துளிகளை விசிறியவளாக
மேகமவள் அசைந்து செல்கிறாள்
மானிடருக்கு பயன்தரு பொருளாக
வந்திடுவாள் மழைத்துளியானவள்
வானவில்லின் நிறங்களை அணிந்தவளாக
அசைந்து செல்கிறாள் வண்ணத்துப் பூச்சியவள்
இனிய கீதங்களை இசைத்தபடி
பறந்து செல்கிறாள் பெரு வனத்துக் குருவியவள்
நீர் அலைகளைப் பரப்பியவளாக
விரிந்து செல்கிறாள் ஒப்பற்ற மழை மங்கையவள்
குளிர் காற்றை விசிறியவளாக
பதுங்கிச் செல்கிறாள் காற்றுப் பெண்ணானவள்
இலைகளை உதிர்த்தவளாக
பரந்து கிடக்கிறாள் மரத்து மங்கையானவள்
காற்றை தந்தவளாக
என்னுடனேயே இருக்கிறாள் என் மூச்சுக்காற்றவள்.

07.06.2015

## துளி பதினேழு

திறந்து வைத்திருக்கிறேன் என்னை
தேடி பரிசீலித்து
கண்டு பிடிப்பதற்கு ஒன்றும் இருக்கவில்லை
என் மூச்சைத் தவிர

## துளி பதினெட்டு

விரும்பிய உணவு
விரும்பிய உடை
விரும்பிய பயணம்
இவற்றுக்கெல்லாம் அவளுக்கு உரிமை இருக்கிறது
இன்னும்
விரும்பிய ஒருவரை பல கோணங்களில்
முத்தமிட்டு முன்னோக்கி செல்லவும் இடமிருக்கிறது

## சிந்திக்கத் தெரிந்த மழை

மழையின் மடியில் உறங்கியபடி
கனவுகிறேன் நான்
மழை நீர் பரவிக்கிடக்கின்றது
பெரு வெளி முழுவதும்
வானவில் தாவணி அணிந்து
அடிவானை அலங்கரிக்கிறது மழைக்காடுகள்
மல்லிகையில் பனிபோல் என் மீது படர்கிறது
மழைத்துளிகள்
பனியின் துளியால் தையல் செய்கின்றது மழை
மழைக்குள் முளைக்கும் காற்று
பெரு வெள்ளமாக மிதக்கிறது ஆகாயத்தில்
மின்னும் ஒளியைப் பரப்பி
ஒற்றை வண்ணத்துப் பூச்சியாக
மிதந்து கொண்டிருக்கின்றது
மழைத்துளிகள் ஆகாயத்தில்
மிதக்கும் தாரகைகள் மின்னி மின்னி
மழையில் பட்டு நனைகின்றன
பசி எடுக்கும் மழை நீர்நிலைகளை குடித்து
விருட்சமாக நகர்ந்து
தேவையான இடங்களுக்கு மிதந்து
செல்கிறது மழைத்துளிகளாக
இப்போது
எல்லோரும் நினைக்கிறார்கள்
சிந்திக்கத் தெரிந்த மழை என்று.

03.11.2014

## துளி பத்தொன்பது

ஆகாயத்துளிகள்
முகில்களாக மாறி
உலகை வலம் வருகின்றது
மழையாக

## துளி இருபது

காதல் உணர்வு எவ்வளவு
அழகானது என்பதை
உன்னைக் கண்ட பிறகுதான்
அறிந்து கொண்டேன்

கனவு பதினொன்று

## கர்ப்பமடைந்த வித்து

இன்றைய பொழுதில் நான் தவறுகிறேன்
தும்பி போல் காற்று என்னை ஒதுக்கி
பெரு வெளியில் அலையாய் அலைத்து
இப்போது பெரு வெளி முழுவதும்
நிரம்பியிருக்கின்றேன்
பின்னர்
காற்றின் பயணம் செய்து
பூக்களில் அமர்ந்து
காற்றின் வேகத்தில் அசைகிறேன்
வண்டு ஒன்று என்னில் சுவைபார்த்து
மகரந்த மணிகளை என் உயிரில் கலந்து
என்னை கர்ப்பமடையச் செய்கிறது
பூவாகி
சருகாகி
நிழலின் ஓரத்தில்
ஒதுங்கிக் கொண்டு
வேர்களின் முகத்தில்
முத்தமிடுகிறேன் ஒன்றுமில்லாமல்.

09.03.2015

## துளி இருபத்தொன்று

காலங்களைப் பருகி
பவனி வரும் உயிர்கள்
கரைந்தோடுகிறது நிதமும்
தேசங்களில் மூட்டிய நெருப்பினால்

## துளி இருபத்திரெண்டு

இடம் தெரியா பெரு வெளி
பரவிக் கிடக்கிறது உடல் முழுவதும்
உரசிப்பார்த்தால் தெரியும்
மனம் என்பது என்னவென்று

## கனவு வெளியில் கவிதை

மன வெளியில் கவிதை
என் மனத்தின் இடுக்குகளில்
அடுக்குகளாக படிந்திருக்கும்
எழுத்துக்கள் மலைபோல் வளர்ந்து கிடக்கிறது
எனக்குள் நான் மிதந்து கொண்டு
என் கவிதைகளை இரசித்துப் பூரித்துப் போகிறேன்
கலைய மறுகிகிறது ஒவ்வொரு நொடியும்
கவிதைக்கான கனவு
கவிதைக்கு வெளியே சில நேரங்களில்
கவிதைக்கு உள்ளே பல நேரங்களில்
கவித்துளிகள் மனத்தின் விளிம்புகளில்
ஒட்டிக் கொண்டிருக்கின்றன
கொட்டும் மழைத்துளிகள் போன்று
வடிகிறது கவிதைகள்
வெள்ளைத்தாள்களில்
சில நேரங்களில் உதிர்கின்றன
வார்த்தை இலைகளாக மனவெளியில்
இங்கு கவிதையின் அழகால்
மனவெளி
தன்னை இழந்து கவிதையாகிறது.

16.12.2015

### துளி இருபத்தி மூன்று

என் மனதை கரைய வைத்து
மெல்ல மெல்ல பெரியனவாக்கி
காமன் கூத்துக்கு அழைத்துச் செல்கிறது
இரவுப் பொழுது

### துளி இருபத்தி நான்கு

நடையில் கவிதைகளை உதிர்த்து
வியர்வைகளால் முளைக்கச் செய்து
புன்னகைப் பூக்களை அதன் மீது
பூக்கச் செய்து இடம் நகர்ந்து செல்கிறாள்
தேவலோக ஒற்றைக் கவிதாயினி

## மண்ணை முத்தமிடும் மழைத்துளிகள்

மழைத்துளிகள் மண்ணை வந்து சேரும் போது
கறுப்பு வீதி நீண்டு கிடந்து
தன் பெருமையைப் பேசலாம்
தன் மீது பயணிப்பவர்களுடன் அடம் பிடித்து
பயணிக்க அனுமதிக்கலாம்

மழைத்துளிகள் மண்ணை முத்தமிடும் போது
சாலைப் பயணம் ஒன்றில் ஈடுபட நேரிடலாம்
கண் கொள்ளாக் காட்சிகளில் வியந்து போகலாம்
தன் வயதுக்கு முந்திய இளசுகளை சந்திக்கலாம்
வாழ்க்கையை அனுபவிக்கத் துடிக்கலாம்
அவர்களின் நினைவுகளை சுமந்த படி பயணிக்கலாம்

மழைத் துளிகள் விண்ணிலிருந்து பூமியைத் தொடும் போது
சின்னஞ் சிறுசுகள் மழையில் நனைந்து
இயற்கையை இரசித்து
மழைக் குளிப்பில் ஈடுபடலாம்
மழையை நனைக்கலாம் அவர்கள்

மழைத் துளி மண்ணைத் தொடும் நேரத்தில்
சாலையில் ஒருவரை ஒருவர் முந்திச் செல்கையில்
தற்செயலாக அல்லது திட்டமிட்டு
சிறிய வழிப்பறிகள் இடம் பெறலாம்
சாலை விபத்துக்களுக்கும் உள்ளாகலாம்

மழைத்துளி மண்ணைத் தொடும் நேரம்
குளிர் காற்றில் அகப்பட்டுக் கொண்ட
கருங்குயில்களும் காகக் குஞ்சுகளும்
கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து போகலாம்
தன் கூடுகளை ஒழுங்குபடுத்தி பறவைகள்
வாழ்வில் இன்பம் காண முயற்சிக்கலாம்

மழைத் துளிகள் அந்தி மாலை மயக்கத்தில்
மண்ணைத் தொடும் தருணம்
வீட்டுக்குள் அடைபட்டுக்கிடக்கும் அவளைக் கட்டி அணைத்து
முத்த மழை பொழியலாம்
தவமிருந்த மழை
பொழியலாம் மீண்டும்.

2014.03.06

## இரவின் மலர்ச்சி

அவர்கள் இருவரும் ஆர்வத்தோடு
வரவேற்கிறார்கள் இரவு மலர்வதை
அந்த காரிருளின் கரு நீலத் துளி ஒன்று வாசலில்
செயற்கை வெளிச்சத்தில் வந்து விழுகிறது
வாசல் முழுவதும் தற்போது இருள் பரவிக்கிடக்கிறது
அவளின் தொண்டையிலிருந்து ஒலிகள்
நழுவி வீடு முழுவதும் நிரம்பியிருக்கிறது
காற்று மெல்லிதாக தன் சிறகினை விரித்து
சிறகடித்துப் பறக்கிறது இருப்பிடம் முழுவதும்
தொண்டைக்குள் நீர்த்துளிகள் கசிந்தோடி
தாகத்தை தன் உடலால் தணிக்கிறது
அவளின் ஆடையில் இருந்த சித்திரங்கள்
ஒவ்வொன்றாய் கழன்று
அவர்களின் காலடியை நிரப்புகின்றன
நீண்ட நாள் காத்திருந்தது போல்
இரவு நெடிதாக நீண்டு கிடக்கிறது
அவன் தன் ஆழ்ந்த கண்களால்
அவளை வாசிக்கத் தொடங்குகிறான்
சிறகு முளைத்த மென்மையான காற்று
தூக்கத்திற்கு அழைத்துச் செல்கிறது இவர்களை.

2015.09.05

## துளி இருபத்தைந்து

காற்று தன்னை
பூக்களால் அலங்காரம் செய்து
அசைந்து செல்கிறது வெளி முழுவதும்
தன்பாட்டில்
அசந்து போகிறேன் நான்
காற்றின் அழகில் மயங்கி.

## துளி இருபத்தாறு

மனதின் கசிவுகள்
கவிதைகளாக வழிந்தோடுகின்றன
தாள்களில் சொட்டுச் சொட்டாக
காலப் போக்கில்.

## விவசாயியின் உழைப்பு

கனவு ஆடையை களைந்தவர்களாக அவர்கள்
கருங்குயில்களின் பேரிரைச்சலுடன்
சூரியன் தன் சிறகை உலகத்தில்
விரிக்கின்றான்
வயல் வெளிகளின் வளைந்த
மடிப்பு வழிகளினூடே அவர்கள்
விரைந்து செல்கிறார்கள்
கானாங் குருவிகள் தங்களது
குரல்களில் அபாய வாள்களை தீட்டிச் செல்கின்றன
காட்டுப்பறவைகள் யானைகளை
இரையாக
போடுகின்றன தன் குஞ்சுகளுக்கு
மெல்லிய காற்று தன் சிறகுகளால்
வயல் வெளிகளை மேகங்களைக் கொண்டு
ஆடை அணிவிக்கின்றது
நீரோடைகள் பாம்புகளாக வளைந்து
சிதறிக்கிடக்கிறது களனிகளினூடே
மாலைப் பொழுது பெரு வெளிகளில்
தனது அபாய நிறங்களை விரித்துக் கிடக்கிறது
விவசாயி தனது வியர்வையை
வயல் வெளிகளில் விற்பனை செய்கிறான்
மேனி எங்கும் நெல் மணிகள்
சேற்றினைப் பூசி பளபளப்பாகுகிறது
இங்கு
சிலரின் உழைப்பில் பலபேர்
உலகங்களை பார்க்க விரும்புகின்றனர்.

2014.05.13

## துளி இருபத்தியேழு

நீ வெட்கப்படும் போது
இவ்வுலகமே வெட்கப்படுகின்றது
நீ சிரிக்கும் போது
இப்பிரபஞ்சமே பூரித்துப் போகிறது

## துளி இருபத்தெட்டு

நான் சிறகடித்துப் பறந்தேன்
நீர்க்குமிழிகளில்
பின்னர் உடைந்தேன்
வலியில்லாமல்

## நிலவுக் குளியல்

நட்சத்திரக் குளிப்பில் மயங்கிக் கிடக்கும் சந்திரன்
பால் வண்ண மேனியை ஆடையாய்
அணிந்து மாலைப் பொழுதை அலங்கரிக்கிறான்
மெல்லிய காற்றில் பால் வெளி பரந்து விரிகிறது
நிலவின் பார்வை உலகெங்கும் விரிந்து கிடக்கிறது
ஆடை களைந்து நிலவு அவன்
நீரோடைகளில் தனது உடலை அமிழ்த்துகிறான்
மீனினங்கள் ஆடி அசைந்து அவனை முத்தமிடுகின்றன
மானிடர்கள் அவனின் அழகை
நீரோடை விளிம்புகளில் நின்று இரசிக்கின்றனர்
அனேகம் பேர் நிலவில் குளிக்கின்றனர் அன்றைய நாள்
இப்போது நீரோடைகளின் மண் தரையில்
ஆடி அசைந்து கொண்டிருக்கின்றான் அவன்
நிலவு வெளிச்சத்தில் சின்னஞ் சிறுசுகள்
அவனை தங்கள் கைகளில் அள்ளி எடுக்கின்றனர்
சிலர் அவனை அள்ளி முகத்தில் அணிந்து கொள்கின்றனர்
ஆரவாரம் இன்றி காணாமல் போகின்றான் அவன்
பெரும் முகில் கூட்டம் முக்காடு போட்டதால்.

2015.07.02

### துளி இருபத்தொன்பது

சாமத்துப் பாடலொன்றை
இசைத்தபடி பறந்து செல்கிறது
ஓர் இரவுப் பறவை

### துளி முப்பது

மெல்ல மெல்ல கரைந்து
போகிறேன்
அவளின் ஒற்றைப் பார்வை
என்னை சிறை செய்ததால்

## இரவு எரிகிறது

அசையும் இருட்டில் இரவு எரிகிறது
கனவில் நீந்தி
கவிதை தன் சுடரும் கீற்றுக்களை
வாசலில் தொங்க விடுகிறது
சிறுகை நீட்டி பனித்துளிகள்
குளிர்காய்கின்றன
மழைப்பழங்கள் வாசலில்
குதூகலித்துக் கொண்டாடுகிறது
இருட்டு அசைந்து கொண்டிருக்கிறது
விடியலுக்காக
பனிப்புகார் மரங்கள் மீது ஏறி
பிரபஞ்சத்தை ஆரத்தழுவுகிறது
குடும்பத்திற்காக தன்னை கரைக்கும்
ஒற்றையர்களை ஆட்காட்டி
குருவிகள் வரவேற்கின்றன வயல் வெளிகளில்
கரையும் காகங்கள் மனிதர்களை எழுப்பி
உலகை சுத்தம் செய்கின்றன
இரவு எரிந்து வெள்ளை ஆடையை விரிக்கிறது
அடிவானத்தில்
சுடரும் பனித்துளிகளில் உன் முகம் பரவிக்கிடக்கிறது
ஒரு பனித்துளியாகி நானும்
உன்னோடு காணாமல் போகிறேன்!

10.02.2015

## துளி முப்பத்தொன்று

தன் சுமை அறியா
நம் உடலம்
மற்றவர்களின் சுமைகளைச் சுமக்கிறது
வாழ்நாள் முழுவதும் தான்
பிறர் வலிகளை தாங்கிக் கொண்டு.

## துளி முப்பத்திரெண்டு

கனவின் அழகை
உரைக்கும் வரையில்
கருமையாகவே இருக்கும்
வாழ் நாள் முழுவதும்.

## வற்றிய குளத்தின் மகிழ்ச்சி

வற்றிய குளத்தின் வேதனைகளை தணிப்பதற்கு
பேரிரைச்சலுடன் பொழிந்த மழை
வானமெங்கும் படமெடுத்து பூமியை
ஈரமாக்கி குளத்தினை நிரப்ப முயல்கிறது
புல்வெளிகள் தலையைத் தொங்கப் போட்டு
நீரோட்டத்தின் விருப்பத்திற்கு இசைகின்றன
குளத்தினுள்
கால் நடைகள் தங்களது முகம்களை பார்ப்பதற்கு
குளத்தினை நாடுகின்றன மகிழ்ச்சியுடன்
பறவைகள் தங்களது நிழல்களால்
குளத்தின் மீது சித்திரங்களை
வரைகின்றன
மறந்து போன நீச்சலை மீனினங்கள்
பயில ஆரம்பிக்கின்றன
குளத்தின் விளிம்புக்கு கரை ஒதுங்குகின்றன
சருகுகள்
பல நாள் குளித்த நீர்ப்பறவைகள்
சுளியோட ஆரம்பிக்கின்றன
நீர்க் குமிழிகளால் சித்திரங்களை வரைகின்றனர்
சின்னஞ் சிறுசுகள்
மழையால் தணிகிறது
குளத்தின் மகிழ்ச்சித்தாகம்.

2014.08.23

## துளி முப்பத்தி மூன்று

அம்மணமான இரவு மங்கை
சேதாரமில்லமல் நகர்ந்து செல்கின்றாள்
கரிய நிறத்தை உதிர்த்தவளாக
உன் வானம் நிறைந்த மன வெளியில்

## துளி முப்பத்திநான்கு

மனங்களில் காலம் படிகின்றது
மனத்தின் வெளிப்பாடு கவிதைகளாக உச்சரிக்கப்படுகின்றன
காலம் கவிதைகளாக வழிந்தோடுகிறது.

## அவளுக்காக அந்த உயிர்

மெல்ல மெல்ல வற்றிக் கொண்டிருக்கிறது உயிர்
கரைந்து செல்கிறது பார்வை
கொஞ்சம் கொஞ்சமாக
தடுமாறி தடுமாறி சித்திக்கிறது சிந்தனை
சிறிது சிறிதாக தவறிக் கொண்டிருக்கிறது நினைவுகள்
தன்னிலை மறந்த விழிகள் மேல் நோக்கி வெறிக்கிறது
புன்னகை மறந்து  மேல் நோக்கி அசைகிறது புருவங்கள்
மனசின் மத்தாப்புக்கள் படிப்படியாக வழுகிச் செல்கிறது
ஊடுருவி உடலைப் பற்றுகிறது அமைதி
திரைப்படமாக கண் முன்னே விரிகிறது
பழைய காதல் நினைவுகள் மடிப்புக் குலையாமல்
அவளின் அன்பை சுமந்து கொண்டு
பறந்து செல்கிறது உயிர் அருகிலுள்ளவர்களை கடந்து
செய்தி ஒன்றை உதிர்த்து
அவளுக்காக.

2014.07.12

## துளி முப்பத்தைந்து

பேனா முனை வலிமை மிக்கது
துப்பாக்கி முனைகளை விட
அதைவிடவும் வலிமையானது
தேர்தல் கால வாக்குகள்

## துளி முப்பத்தாறு

நீரில் பூக்கும் வட்டங்கள்
மனதை வருடி
மனங்களை சிறைப்படுத்தி அமைதியடைகின்றன
சில நொடிகளில்
அடுத்த வட்டம் வரும் வரை.

## கவிதை மரம்

ஒற்றை இரவில்
ஒரு சொல்லால் விதை போட்டு
வெண்பனிகளால் நீரையிட்டு
மனம் போட்டு வளர்த்த அரூப மரம் இது
கவி மல்லிகையை பூக்கச் செய்து
அதன் வாசனையை பெரு வெளி
எங்கும் பரவச் செய்து
கவி மணம் பரவியிருக்கிறது பார் முழுவதும்
அரூப மரத்தின் கிளைகளில்
ஊஞ்சலாடி அசைகின்றன
சின்னக் கவிதைகள்
கவிப் பெருமை பேசுகின்றன
கிளைகளால் அலங்கரிக்கப்பட்ட அந்தக் கவிமரம்
பட்டாம் பூச்சிகள் கவிதையின்
வாசனையை முகர்ந்து கவித்தேனை அருந்துகின்றன
பூக்களாக கவிச் சொற்கள்
மீண்டும் மீண்டும் கிழர்ந்தெழுந்து
கவித்தேன் சொட்டுக்களாக காதுகளில்
விழுகின்றன
சொற்களை மீண்டும் மீண்டும்
தருகிறது இந்தக் கவி மரம்
ஒவ்வொரு கவிதையும் விதையாக
விழுந்து விழுந்து மீண்டும் முளைக்கிறது
கவிதை மரம் அரூபமாக.

2016.01.01

## துளி முப்பத்தியேழு

ஏதோ ஒன்றை
விட்டு விட்டு வந்தது போல
ஓர் உணர்வு
அவளைச் சந்தித்த பின்னர்

## துளி முப்பத்தியெட்டு

தேனை சேகரிப்பதற்காக
தேனீக்கள்
வரிசை வரிசையாக
காத்திருக்கின்றன
முலைப்பூவில்

## கனவின் பிரதிமை

என் உருவத்தின் பிரதிமையை இப்போது உணர்கிறேன்
கனவு தன் கிளைகளில்
தன்னைப் பரப்பிக் கொண்டிருக்கிறது
நான் உறக்கத்தில்
அசைந்துகொண்டிருக்கிறேன் கனவின் உந்துதலால்
கனவு என்னோடு பேசிக்கொள்கிறது தன்
இறப்பைப் பற்றி
நான் திரைப்படமாக ஓடிக்கொண்டிருக்கின்றேன்
கனவின் விழிகளில்
மரங்களும் கொடி மல்லிகையும் என்னில்
படர்ந்து மணம் பரப்புவதை உணர்கிறேன்
பாம்பு போன்று கொடிகள் ஸ்பரிசம் செய்கிறது என்னை
பனிப்பூக்களும் சொட்டுச் சொட்டாய்
கொட்டுகிறது கனவின் மீது
என் அவயங்களை நனைக்கிறேன் அதில்
முத்தமிட்டு மலர்களின் நறுமணத்தில்
என்னை எழுதுகிறது பிரதிமை.

04.10.2015

### துளி முப்பத்தொன்பது

மனதை தொங்க விட்டு இறக்கைகளை
வீசிய படி பறந்து செல்கிறது
என் சாமத்துக் கனவுகள்

### துளி நாற்பது

தினசரி தரிசிக்கும் - அந்தச்
சேலையிலிருந்து ஒரு கவிதையேனும்
திருடிவிடுகிறேன்

## மழைக்காலம்

மழை சூள் கொள்கிறது இரவு நேரங்களில்
இருளால் முடிகிறது
அடுத்த நாள் காலை வரை
மழைக் கால இசைக் கச்சேரி தொடங்குகிறது
இருளின் மடியில்
இலைகள் உறங்குகின்றன கிளைகளின் தாலாட்டில்
மழையின் தாலாட்டில் குருவிகள் பயணிக்கின்றன
மழை ஓடி வர வானம் கிடுகிடுத்து
கார் கால மையிருட்டில் அந்தி வானம் பிறக்கிறது
உழவன் தன் தொப்புள் கொடி வயலிலிருந்து
விடைபெறுகின்றான்
மழையினை சுவாசித்து
சிறகடிக்கின்றன பட்டாம் பூச்சிகள்
இயற்கை அழகு பெறுகிறது மழையினால்
மழையை உண்ணும் பயிர்கள் மகிழ்ச்சியில்
திளைக்கின்றன
மழையை சமைக்கும் இறைவன் கண்காணிப்பில்
மனதின் இச்சைகளை ஊறச் செய்யும் மழை
இரவின் வாசிப்பை அதிகரிக்கிறது
மழையில் என்னை
அறிந்து கொள்கின்றேன் நான்.

2015.06.08

## துளி நாற்பத்தொன்று

விரல் பிடித்து நடந்து வருகிறது
என் கவிதைகள்
பதிப்பு என்னும்
புத்தகக் கோலம் போடும் வரை

## துளி நாற்பத்திரெண்டு

தண்ணீரில் நீந்தும்
நிலாவைப் பிடிக்க
முன்டியடிககின்றன
மீன்கள்

## சிந்தனை விதைகள்

அடுக்கி வைக்கப்பட்ட மனதின் துளிகள்
மன வயல்களில் விழுந்து
முளைத்துப் பரவிக்கிடக்கிறது
அறிவு பொக்கிசமாக விரிந்து கிடக்கிறது
தன்னைச் சிதைத்த சிந்தனை விதைகள்
ஒவ்வொருவரினதும் சுயத்தின் அரூபம் மொழியில்
விரிகிறது நிதமும்
பேனா முனை கொண்டு அறுவடை செய்து
வெள்ளைத்தாள்களில் ஏற்றப்படுகின்றன
அச்சு இயந்திரங்களில் நெய்யப்பட்டு கோர்வை
செய்யப்படுகின்றன அறிவுப்பசியைத் தீர்ப்பதற்காக
சிலர் இதன் கூறுகளை தமக்கான
ஒளிகளாகப் பார்க்கின்றனர்
அறிவின் பரம்பல் விரிந்து கிடக்கின்றது
எம் முன்னே
மனவயல்களில் மீண்டும் மீண்டும்
விதைக்கப்படுகின்றன புதிய ஒளிகளாக
ஆழ் மனதில் பரவிக்கிடக்கும் குளிர் விதைகள்
சிந்தனைப் பூக்களாக மலர்ந்து கிடக்கிறது
கிடையாகவும் நெடிதலாகவும்.

## துளி நாற்பத்திமூன்று

பெரு வெளியில் பரவிக்கிடக்கிறது
என் மூச்சு தனிமையில்
மூச்சுக்கடல்
வற்றிப்போகும் வரை

## துளி நாற்பத்திநான்கு

நிமிர்ந்து நிற்கையில் நான்
நிழல் உருகி
மண்ணில் மறைகிறது
சூரியனின் கதிர் வெள்ளத்தால்

## நடை அழகி

ஒற்றை உருவம்
ஒரு காலைப் பொழுதில்
என்னைப் பார்த்த படி
நகர்ந்து செல்கிறது
அழகினை இறைத்தபடி
ஒவ்வொரு எட்டிலும்
உலகினை வாங்கி
அழகினை விற்றுச் செல்கின்றாள்
பலரும் அவளின் அழகை
கண்களால் கொள்வனவு செய்கின்றனர்
என் மனம் உதிர்ந்து கிடக்கிறது
காலடியில்
அவள் எறிந்த கற்களால்.

2013.02.16

## துளி நாற்பத்தைந்து

வெளிச்சத்தைப் பருகும் இருள்
அமைதியாய் பரந்து கிடக்கிறது
மாலை மயக்கத்தில்

## துளி நாற்பத்தாறு

வானவில்லை வளைத்து
என் மனதில் படரச் செய்து
வார்த்தைகளால் விசிறிச் செல்கிறாள்
என் மனதின் மீது

## குணங்கள்

பிடிவாதம் படிப்படியாக கரைந்து மழையாகப்
பொழிகிறது பூமியின் மீது
கர்வம் கலைந்து
பாம்பாய் சுருண்டு கிடக்கிறது காலடியில்
விகாரம் தன் காலை முறித்து நொண்டித் திரிகிறது
பசி சேலை உடுத்து தன்னை அழகுபடுத்துகிறது
இரவு வேளைகளில்
புன்னகை பனித்துளிகளாக பரவிக் கிடக்கிறது
ஆகாயத்தில்
சிரிப்பு சில்லறை காசாக சிதறிக் கிடக்கிறது வாசலில்
நிம்மதி நெஞ்சுக் குடத்தில்
நிரம்பியிருக்கிறது கடல் போன்று
இத்தனையும்
ஓடியும் நடந்தும்
நொண்டிக் கொண்டும் திரிகிறது சமூகத்தில்.

14.05.2014

## துளி நாற்பத்தேழு

உன்னையே நினைக்கிறேன்
எப்போதும்
உன்னை மறக்க நினைப்பதால்

## துளி நாற்பத்தெட்டு

என் கவிதைகள்
தாவணியில்
தொங்கி அதில் பூக்களை
கிள்ளி எடுத்து
எனக்கு அனுப்பியது காற்றினூடே

## கறுப்பழகி

கரு நீல சாயம் பூசி
அமாவாசையில் உருவம் செய்து
கரு மேகங்களால் ஆடை உடுத்து
நாவல் கறுப்பில் அழகு செய்து
கருங் குருவி நிறத்தில் தோலை அணிந்து
பவனி வரும் என் கறுப்பழகி
கருவானம் இறங்கி வந்து
உனக்கு ஆடை தந்து
கண் குளிகளுக்கு கரு நீல சிறகு கட்டி
கண் இமைகளால் பாலம் அமைத்து
அழகிலும் அழகான என்
கருமை வண்ண தேவதையே
அடுப்புக் கரிகளால்
எரி மூட்டி மேனியெங்கும்
கறுப்புக் காகிதங்களில் கரிய நடனம் புரியும்
தெளிந்து தெரியும் அமாவாசை இரவில்
கருநிற முகச் செடியில்
புன்னகைப் பூ உதிர்ப்பவளே
கார் இருள் கரைந்தோடுகிறது
இவளின் வதனத்திலிருந்து
மேலும்
இருள் கடலாக அமைதி அடைகிறது.

2013.11.27

## துளி நாற்பத்தொன்பது

புரிதல் உண்டாகும் போது
வார்த்தைகள் குறைந்து
மௌனம் பிறக்கிறது

## துளி ஐம்பது

பசுமையான நினைவுகள்
என்றும் இனிமையானவை
தூங்கவிடாது எப்போதும்
அவளை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும்
என்பதற்காக

## வாழ்விடம்

இந்த இடம் எனக்குச் சொந்தமானது
அது என்னோடு பிரியமாக இருந்தது
இங்கு ஒரு அழகிய இல்லம் இருந்தது
அதனுள்ளே நான் வாழ்ந்திருக்கிறேன்
நகமும் சதையுமாக
அந்த நாட்களில் நான் எனது குடும்பம்
நண்பர்கள் அந்த பூனைக்குட்டி
எல்லோரும் வாழ்ந்திருக்கிறோம்
குடும்பத்தின் வேர்கள் இங்குதான்
பரவியிருந்தது விசாலமாக
குடும்பத்தின் அர்த்தங்கள் அங்கு
பல கோணங்களிலும் பரம்பியிருந்தது உயிரோடு

அன்றைய சுத்தமான காற்றும்
மலர்களிலான விசிறிகளும் நறுமனங்களும்
இன்றும் எமக்கு மணக்கின்றன

வாசலில் பரந்து கிடந்த மரங்கள்
என்னை நினைவில் வைத்திருக்கின்றன
அன்றைய குயில்களின் பரம்பரைகள்
இன்னும் அந்த மரங்களில் கூவுகின்றன
வாசலில் வரும் தவளைகளும் வாலான் குஞ்சுகளும்
எங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றன.

பட்டாம் பூச்சிகள் தன் சிறகுகளை
படபடத்து அடித்து
சிறகுகள் விரித்து பறந்த வண்ணம் இருக்கும்
சிறிய வண்டுகள் மகரந்த மணிகளை
உதிர்த்த வண்ணம் வாசலில் பறந்து கொண்டிருக்கும்
குருவிகளின் இரைச்சல் வாசலெல்லாம் பரவிக் கிடக்கும்
சின்னஞ் சிறுசுகள் பாடி ஆடி விளையாடித் திரிவர்

பழைய பெட்டகம் மர அலுமாரி
என்பனவைகள் வீட்டில் இருந்தன
கண்டாங்கிச் சேலை பளையாட் சாறம் சிறுவால்
வட்டா படிக்கம் என்பனவும் இங்குதான் இருந்தது
இன்றும் மணக்கிறது பழைய பெட்டகம்
வாசலில் சில்லூறிகளின் அசைவோடு விசிலடிப்புக்கள்
பல்லிகளின் மைதானங்களாக அந்தச் சுவர்
வாசல் பூக்களின் தேனின் சொட்டுக்கள்
சாயங்கால புழுதியில் விளையாடும் குருவிகளின்
இரசிப்பில் மயங்கி இருத்தல்

தேசத்தின் கெடுபிடிகளில் சிக்குண்டு சுதந்திரத்தின்
காற்றை கையில் எடுக்க
துப்பாக்கிகளை அணிந்து கொண்டோம்
ஆடையாக
அன்று முதல் ஆயுத மயமானது குடும்பச் சூழல்.

2013.02.06

### துளி ஐம்பத்தொன்று

உன்னை விட்டுப் போக மனமில்லாமல்
தவிக்கிறேன் அன்பே
இருந்த பொழுதிலும் எல்லா இடங்களுக்கும்
போகிறேன்
எல்லா இடத்திலும் நீ பிரசன்னமாய்
இருப்பதால்

### துளி ஐம்பத்திரெண்டு

ஒரு புதுக் கவிதைதான்
உன் புன்னகை
அடிக்கடி வாசிக்கப்படுகிறது
என் கண்களால்

## துளி ஐம்பத்தி மூன்று

குறும்புகள் பல செய்து
மற்றவர்களைச் சீண்டிப் பார்க்கிறது
சிறுபிள்ளைத் தனம்

## துளி ஐம்பத்திநான்கு

உன்னிடம் சொன்ன பொய்களையும்
சொல்லாத உண்மைகளையும் கவிதைகளாக நினைத்தபடி
வாசித்துக் கொண்டிருக்கிறது
என் இதயம்

## அவன் அழகானவன்

அவன் அழகானவன்
அவன் அழகானவன் என்று
கடலும் அருகிலுள்ள களிமுகமும்
சொல்லி நிற்கின்றது
மகிழ்ச்சியின் பூரிப்பில்
களி முகத்தில் நீராட எத்தனிக்கின்றான்
காற்றினூடே ஆடைகள்
விலகி நின்றது
இதனால் உந்தப்பட்ட
வெளிச்ச வீடும் அவன் அருகில் வந்து நின்றது
அவனுக்கு அது பிடித்திருந்தது
அதனால் அவன்
தன்னை முழுவதும் திறந்து வைத்தான்
கடலலை ஓய்வு பெற்றது சில நிமிடம்.

2012.06.15

## துளி ஐம்பத்தைந்து

உன்னைத் தொடருகின்றேன்
காலமெல்லாம்
உன் நிழலாக

## துளி ஐம்பத்தாறு

என்னிடம் தோற்றவளாகவும்
என்னை வென்றவளாகவும்
அவள் என்னை
வாசித்துக்கொண்டிருக்கிறாள்

## உள்ளுணர்வு

மரத்திலிருந்து இலைகள் உதிர்த்து புன்னகையை
அணிந்து நகர்வலம் செல்கிறது
மனதில் படர்ந்த கொடிகள் பாம்பாக சுருண்டு கிடக்கிறது
வானத்தின் வனப்பு நீலப்பொழிவாகி
ஆகாயத்தில் நீந்தி தன் சிறகுகளை விரிக்கிறது
காற்றைப் பருகி மரங்கள்
ஆடி அசைந்து கொண்டிருக்கின்றன
இருட்டு மெல்ல மெல்ல அசைந்து பரவுகிறது
இரவுப் பூவின் மயக்கத்தில் நிலவு குளிர்காய்கிறது
மரங்களின் அரூப இசையில் மழைத்துளிகள்
கரைந்து ஆவியாகி பனித்துளியின் தற்கொலை
முழுமையடைகிறது பெருவெளிகளில்
நகரும் மரங்களின் வாசலில் பூக்கள் கொட்டிக்கிடக்கின்றன
நீர்ப் பூக்களின் விளிம்புகளில் ஏரிகள் குடியேறுகிறது
சேலையின் ஓரங்களில் பூக்கள் நழுவிச் செல்கிறது
தாவணியில் சிந்திய முத்தங்கள்
ஒன்றை ஒன்று தாவிச் செல்கின்றன
காற்று அரைவட்டமாக நெழிந்து
வெளிச்சம் பரப்பிச் செல்கிறது
முகங்களிலிருந்து உற்றுப்பார்க்கும்
கண்களை மறைக்கிறது இவையனைத்தும்
உள் உணர்வுகளால் கரைந்து போகிறேன்
கனவுகளில் நான்.

### துளி ஐம்பத்தியேழு

அது போலத்தான்
மரணத்திலும்
அனேக சிந்தனைகளை சுமந்து
பயணிக்கிறது மனசும் இதயமும்

### துளி ஐம்பத்தெட்டு

தனி மொழி பிறக்கிறது
நிசப்பத்தில்
மேனி எங்கும்
மௌனமாக நிற்கின்றன வார்த்தைகள்
இரவின் இருள் போன்று

## கவலையென்று அவள்

கவலையென்று அவள்
கவலை தன் சிறகை விரித்து
பரவிக்கிடக்கிறாள் காலம் முழுவதும்
மனங்களிலும் சிந்தனைகளிலும் ஊடுருவி
வாழ்வின் கதையை எழுதிச் செல்கிறாள்
கிளட்டு வெயிலிலும் முதுமையடைந்த
பால் நிலவிலும் பரந்து கிடக்கிறாள் அவள்
நிரம்பிய இரவின் மணத்திலும் விடியும்
காலையிலும் கவலை தன் கதையை எழுதுகிறாள்
நட்புகளிலும் இரவின் காதல் நெருக்கத்திலும் தனது
நீண்ட கைகளை அழுத்துகிறாள் கவலை
மரம் செடி கொடிகளிலும் தாவரங்களிலும் கவலை
தன் நீரைப் பாய்ச்சியிருக்கிறாள்
ஆகாயத்திலும் பெருவெளிகளிலும் காற்றிலும்
கவலை தன் பெயரை எழுதிச் செல்கிறாள்
அவளின் இதயத்திலும் முகத்திலும்
தோள்களிலும் முலைகளிலும்
உதடுகளிலும்
கவலை தன் பெயரை எழுதியிருக்கிறாள்
என் மனத்தில் உடலில் ஆடைகளில்
எண்ணங்களில் இறுதியில் எனது நிழலில்
தனது உடலை பொருத்தியிருக்கிறாள்
கவலை.

19.07.2014

## துளி ஐம்பத்தொன்பது

உண்மையான எண்ணங்களிலும்
சிந்தனைகளிலும்
வளர்க்கிறது
கோட்பாடுகளும் சித்தாத்தங்களும்
பரீட்சிக்கப்படாதவைகளாகவே

## துளி அறுபது

ஓய்வே இல்லாமல்
நீண்ட தூரம் பயணிக்கும்
பறவை போல
நீண்ட தூரம் இலக்கு நோக்கி
பயணிக்கவேண்டியிருக்கிறது
வெற்றிக்காக

## இலைகள் மரங்கள்

புகைந்து எரியும் மூச்சுக்காற்றினை மரங்கள்
வாரி இறைக்கின்றன பால் வெளியில்
ஆடி அசைவதற்கான அனுமதி பெற்று
காற்று பேசுகின்றது இலைகளுடன்
சீதள ஓலைத் தொட்டியில் வெள்ளிப் பனிகள்
உறைந்து மரங்களின் கைகள் நீண்டு
காற்றில் இசையமைக்கின்றன
தாள்கள் தண்டுகளை முத்தமிட்டபடி
முதுகில் நிறங்களைத் தீட்டி பரவிக்கிடக்கிறது
பழுப்பு இலைகளை புழுக்கள் சுருட்டி
ஆடையாய் அணிகின்றன
மரங்களின் உடலிலிருந்து களன்ற இலைகள்
மீண்டும் கொண்டையை
தாழ்த்தி பூமியை முத்தமிடுகின்றன.
வான வெளிக் கண்ணாடியில்
தமது முகங்களை காட்டி மகிழ்கின்றன இலைகள்
மரங்களிலிருந்து இடம் மாறிக்கிடக்கின்றன
சருகுகள் ஒன்றன் மீது ஒன்றாக
கனி நிறமுடைய சதைப் பந்துகள் மரத்தில்
ஒட்டியும் மண் மெத்தையிலும் தூங்குகின்றன
பறவைகளின் வாயில் பட்டு நிறக் கனிகள்
எரிக்கின்றன தன் உடலின் பகுதி வரை
சில விதைகள் சிதறி பூமிப் பெண் மீது
பரவிக் கிடக்கின்றன
மீண்டும் முளைப்பதற்காக.

## துளி அறுபத்தியொன்று

உன் புன்னகை என்னும் புடிக்குள்
அமிழ்ந்து கிடக்கிறேன் நான்
காலமெல்லாம்

## துளி அறுபத்திரெண்டு

உன் அழகை விட
உன் புன்னகை அழகானது
உன் வெட்கத்தை விட
உன் பேச்சு அழகானது
நான் உன்னோடு இருக்கும் வரை

கனவு முப்பத்திரெண்டு

## மழை வரும் நாள்

அந்தர வெளியில் பரவிக்கிடக்கும்
குளிர் காற்று உதிர்ந்து கொண்டிருக்கின்றது
நறுமணங்கள் பயணம் செய்கின்ற காற்றினூடே
வழித்தடங்களை சமைத்துக் கொண்டு
வண்ணத்துப்பூச்சியின் இறகுகள் கண்களின்
வட்டச் சுழர்ச்சியில் சிக்கிக்கொள்கின்றன
நெளியும் ஆவிகளின் சுவாசம் அந்தரத்தில்
தொங்கிக் கொண்டிருக்கின்றன
மரங்களின் மூச்சுக்காற்றால்
வெற்றிடங்கள் நிரம்பி
வறண்ட வெளியின் புன்னகையும்
மழை பட்ட புழுதி மண்ணின் வாசனையும்
புகையாய்ப் பறக்கிறது
பெருவெளி வசிப்பாரின்றி விரிந்து கிடக்கிறது
ஒற்றை இறகு வண்ணத்துப்பூச்சி
மிதந்து கொண்டிருக்கிறது தனிமையில்

இலையுதிர் கால நிற
இலைகள் தப்பிச் செல்கின்றன தடுப்பு நோக்கி
பெருவெளியின் வெடிப்புக்களில்
பனி மழை நிரம்பி வழிகின்றது
நீரின் கீறலில் பூமியின் வெடிப்புக்குள்
விம்மி பரவும்
பனித்துளிகள் வெள்ளிச் சிதறல்களாக
பரவிக்கிடக்கிடக்கிறது பெருவெளி முழுவதும்
முக மூடிகள் அணிந்து
அசைந்து கொண்டிருக்கிறாள் வான் தெருக்களில்
என் பேரழகி
வானம் குமுறி கறுப்புச்சேலை உடுத்தவளாய்
சேலையில் நனைந்து கொண்டு
வந்திறங்குகிறாள் மழை மகள்

03.02.2016

## துளி அறுபத்தி மூன்று

அதிகாலை பனித்துளிகளை விட
உன் மூச்சின் நீர்த்துளிகள் அழகானது

## துளி அறுபத்தி நான்கு

மழையிலிருந்து கொட்டிக்கிடக்கும்
மழைப் பூக்களை என்ன
செய்வதென்று எனக்குத் தெரியவில்லை
எனக்குச் சொல்லிக் கொடு இயற்கையே

## நடைப் பயணம்

கரைந்து போன தெருவில் நான் வழுகிச் செல்கிறேன்
என்னைக் கடந்து செல்ல எத்தனிக்கின்றன
காகங்களின் இரைச்சல்கள் ஒவ்வொரு எட்டிலும்
மரங்களின் ஓசைகள் என் காதுகளில்
நிரம்புகின்றன மெல்லிசையாக
பனித்துளிகளின் சொட்டுக்கள் எனது உடலின்
விளிம்புகளை நனைக்கின்றது மிகுதி இல்லாமல்
இலைகளும் இறகுகளும் வழித்தடங்களில்
காற்றை பின் தொடர்கின்றன
மரங்களின் கண்ணீர் உதிர்ந்து முகப்பருக்களையும்
மூக்கின் நுனியையும் முத்தமிடுகின்றன
அவளின் எண்ணங்கள் என்னுடன்
சமனாக செய்திகளை சொல்லிச் செல்கிறது
அதே மரங்களின் இலைகள் அவளின் சிரிப்புக்குச் சமனாக
முன்னால் ஆடிச் செல்கின்றன
நடையின் எட்டுக்கள் இதயத்திற்கு சமமாக துடித்து
நிமிடங்களை எண்ணிக் கொண்டிருக்கின்றது
மரக்கிளை நிழலின் ஓரங்களில்
நான் நிரம்பிக் கொண்டிருக்கின்றேன்
முன்னோக்கி நகர்கின்றது
எனது நிழல் இப்போது.

## துளி அறுபத்தி ஐந்து

ஓர் இன்பம்தான்
தனித்திருப்பது அவளுடன்
தனிமையில்

## துளி அறுபத்தியாறு

கிளி விழும் பரந்த வயல் காட்டில்
மன வெயில் படர்கிறது
கைகொட்டிச் சிரித்து மகிழ்கிறது
என் கடல் மனம்

## பிறமை

அந்தர வெளிகளில் பூத்துக் கிடக்கும்
நீலப்பூக்களின் வாசனை முகர்ந்து
மயங்கிக்கிடக்கின்றன விண் மீன்கள்
நானும் நீல வாசத்தில் கிடக்கின்றேன் மயக்கத்தில்
இருளில் திரியும் இரவுப் பறவைகள்
தம் வழித்தடங்களில் ஊர்ந்து செல்கின்றன
இருளின் வெளிச்சங்களில் வண்ணத்துப் பூச்சிகள்
ரீங்காரங்களை நீட்டிச் செல்கின்றன
மலை உச்சியில் இருந்து கீழ் நோக்கி சரியும்
நீர் கோடுகளில் ஊடுருவிப் பறக்கின்றன
மழைப் பறைவைகள்
நாடோடி மிருகங்களின் சித்திரங்கள்
மிதந்து செல்கின்றன ஓடைகளில்
தாகம் தீர்ப்பதற்கு
ஒளிச் சொட்டுக்கள் கழன்று பனித்துளிகளோடு
ஒட்டிப் பயணிக்கின்றன மர இடுக்குகளில்
சித்திரங்கள் சுவாசித்த காற்றை
உறைய விடாமல் தடுக்கின்றது குளிர் நிலவு
ஓவியங்களில் இருந்து ஒழுகும் ஒளிகளை
பாறைகள் விழுங்கிக் கொள்கின்றன
நொடி வாழ்வு கலைவதை புலம்பிச் செல்கின்றன
நீர் வாள் வெட்டிய பனி துளிகள்
மலை உச்சியில் இருந்து சூரியனோடு
ஒரே சமயத்தில் இறங்கிக் கொண்டிருக்கின்றேன்
நான்
இன்னொரு கனவில் வீழ்வதற்கு.

## துளி அறுபத்தியேழு

நாட்காட்டியைப் பார்க்கும் போதுதான்
பிறந்த திகதி கூட
ஞாபகத்திற்கு வருகிறது
அவளின் ஞாபகங்கள்தான்
நிரம்பியிருக்கிறது
மனசெல்லாம்.

## துளி அறுபத்தியெட்டு

புன்னகை சிரிப்பு இரவு
எதுவும் தேவையில்லை
உன்பார்வை மட்டும் போதும் கண்ணே

## மாயப் புத்தகம்

ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி
வைக்கப்பட்டுள்ள தாள்களில்
கலை மடித்து
வைக்கப்பட்டுள்ளது

பக்கவாட்டில் கிடக்கும் தாள்களில் அதிசய
மரங்கள் முளைத்து
கூந்தல் விருட்சங்களாக பரவி
தாளில் மிதந்து செல்கிறது

சூலில் பிறந்த உருவங்கள் கதையில்
நிரம்பியிருக்கின்றன
அரூப இசையுடன் கனிப்பெண்களின்
வாசனையும் விரிந்து கிடக்க
தாளில் புதைந்து கிடக்கும்
அரூப மிருகங்கள் மொழி சமைத்து
சத்தங்களை எழுப்பி நீண்டு கிடக்கின்றன

விரிந்த கடலும் ஏரிகளும்
வெள்ளைத்தாள்களில்
உயிருடன் வந்து போகின்றன

தீட்டிய ஓவியங்களின் நிறங்கள் உதிர்ந்து
வெளிர்ந்த பறவைகளில் படிகிறது
சித்திரங்கள் காற்றை சுவாசித்து
உயிர் பெறுகிறது பக்கங்களில்
விழியற்றோர் வரைந்த சித்திரங்களும்
நிறங்களால் நிரம்பியிருக்கின்றன

உறைந்து கிடக்கின்றன பக்கங்களில்
நிழல் பரப்பும் மரங்கள் முறியும் ஒலியில்
மிருகங்களும்
நிறங்களை அணிந்த பறவைகளும்
ஒவ்வொன்றாக வெளியேறுகிறது
கதை வாசிக்கப்படும் போது

பின் தொடர்கிறது என்னை
அப்புத்தகம்
முன்னோர் காலத்திலிருந்து
வாசிப்பிற்காக.

## துளி அறுபத்தியொன்பது

கவிதைகளை
மிகவும் இரசிக்கிறேன்
எல்லாக் கவிதைகளிலும்
நீ நிறைந்திருப்பதால்

## துளி எழுபது

அவள் மடியில்
உட்கார்த்தி வைத்திருந்து
என் மனதிடம்
விசாரித்தாள் சுகம் பற்றி

**கடைசிப் பக்கச் செய்தி...**

"தனக்கு எல்லாம் தெரியும் என்று
ஒருவர் நினைக்கும் போது
கற்றுக் கொள்வதற்கான வழிகள் மூடப்படுகின்றன"

## நூலாசிரியரின் முன்னைய ஆக்கங்கள்

01. மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம் பகுதி I)

02. மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம் பகுதி II)

03. பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள்

04. பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள்

05. மாம்பழக் கொச்சி (கவிதைப் புத்தகம்)

06. மருதமுனை அல்மனார் மகா வித்தியாலய வரலாறு

07. An Introduction to Public Administration and Divisional Secretariat System in Sri Lanka. (ஆங்கிலப் புத்தகம்)

08. இலங்கை முஸ்லிம்களால் எதிர்கொள்ளப்படும் சவால்கள் (சமகால நிகழ்வுகளின் ஒரு பதிவு)

09. மிதக்கும் கனவுகள் (கவிதைகள்)



“இத்தொகுதியிலுள்ள நெடிய கவிதைகளை விட
குட்டையானவை பிரகாசிக்கின்றன.
ஒரு பூந்தோட்டத்தில் அழகான குள்ளர்கள்
உலா வருவதைப்போல இருக்கின்றன.

குட்டையர்கள் அதிகம் நிறைந்திருக்கும்
இந்தத் தொகுதி நௌபலின் ஏனைய
தொகுதிகளினின்றும் மாறுபடுகின்றது.
குட்டையர்கள் காத்திரமானவர்கள் என்பதை
இங்கும் நாம் உணர முடிகின்றது.

நௌபலின் இந்தத் தொகுதியைப் பார்க்கும் போது
இவரின் சிந்தனை மாறுபட்டிருக்கிறது.
கவிதையைப் பொத்திவைக்கும் கைவண்ணம்
மேலோங்கியிருக்கின்றது.

*- சோலைக்கிளி*

50-00

ABNA Offset Printing
# 07, Main Street, Maruthamunai. Tel.: 067 2225448, 077 2256648

ISBN 978-955-42405-2-0
9 789554 240520